| முக்கிய குறிப்புகள் | |
|---|---|
| **ஒலி அலைகளின் வகைகள்** | ❋ **செவியுணர்ஒலி அலைகள் :** 20 Hz முதல் 20,000 Hz வரை அதிர்வெண் கொண்டவை.<br>❋ **குற்றொலி அலைகள் :** 20Hz விட குறைவான அதிர்வெண் கொண்டவை.<br>❋ **மீயொலி அலைகள் :** 20,000Hz விட அதிகமான அதிர்வெண் கொண்டவை. |
| **ஒலி அலைகளின் திசைவேகம்** | **துகள் திசைவேகம் :** ஒரு ஊடகத்தில் அலைகள் வடிவில் ஆற்றலைக் கடத்துவதற்காக துகள்கள் அதிர்வடையும் திசைவேகம்.<br>**அலைத் திசைவேகம் :** ஒரு ஊடகத்தின் வழியே அலை பரவும் திசைவேகம் ஆகும்.<br>**பாதிக்கும் காரணிகள் :** வெப்பநிலை, அடர்த்தி, ஒப்புமை ஈரப்பதம், மீட்சிப் பண்பு |
| **எதிரொலிப்பு** | ஒலியானது ஒரு ஊடகத்திலிருந்து மற்றொரு ஊடகத்திற்கு பரவும் போது இரண்டாவது ஊடகத்தால் எதிரொலிக்கப்பட்டு முதலாம் ஊடகத்திற்கு திருப்பி அனுப்பப்படுகிறது. இதுவே எதிரொலிப்பு எனப்படும். இதன் பயன்பாடுகள்<br>**கூம்பு ஒலிப்பெருக்கி :** சிறிய அளவுக் கூட்டத்தில் உரையாட உதவும் குழல் வடிவ கருவி<br>**ஒலி எதிரொலிப்பு அட்டை :** ஒலியின் தரத்தை மேம்படுத்த அரங்கங்கள் மற்றும் இசையரங்குகளில் பயன்படுகிறது.<br>**காது கேட்க உதவும் கருவி :**காது கேட்டல் குறைபாடு உள்ளவர்களுக்கு பயன்படுகிறது.<br>**மெதுவாகப் பேசும் கூடம் :** அறையில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பேசப்படும் ஒலியானது எதிர்புறம் உள்ளக் குறிப்பிட்டப் பகுதியில் தெளிவாகக் கேட்க முடியும். |
| **எதிரொலி** | எதிரொலி என்பது பல்வேறு கடினமான மேற்பரப்பில் இருந்து அசல் ஒலி அலையின் பிரதிபலிப்பின் காரணமாக மீண்டும் உருவாக்கப்படும் ஒலி ஆகும். |
| **தோற்ற அதிர்வெண்** | கேட்குநரால் கேட்கப்படும் ஒலியின் அதிர்வெண் ஆகும். |
| **டாப்ளர் விளைவு** | ஒலி மூலத்திற்கும், கேட்குநருக்கும் இடையே சார்பியக்கம் இருக்கும் போது, கேட்குநரால் கேட்கப்படும் ஒலியின் அதிர்வெண்ணானது, ஒலி மூலத்தின் அதிர்வெண்ணிலிருந்து மாறுவது போல் தோன்றுவது டாப்ளர் விளைவு எனப்படும். |
| **ரேடார் (RADAR)** | Radio Detection and Ranging – ரேடியோ அலைகளை அனுப்பி விமானங்களின் வேகம் மற்றும் இருப்பிடத்தைக் கண்டறிய பயன்படுகிறது. |
| **சோனார் (SONAR)** | Sound Navigation and Ranging - நீரில் அனுப்பப்பட்ட மற்றும் எதிரொலித்தக் கதிரின் அதிர்வெண் வேறுபாட்டைக் கொண்டு கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறியலாம். |

★ அலைத்திசைவேகம், $V = \frac{\lambda}{T} = n\lambda$ ;

★ அடர்த்தியின் விளைவு $V \ \alpha \ \sqrt{\frac{1}{d}}$

★ வெப்பநிலையின் விளைவு $V \ \alpha \ \sqrt{T}$;

$V_T = (V_0 + 0.61\ T)$ மீவி$^{-1}$

★ எதிரொலியின் வேகம் $= \frac{2d}{t}$

★ மனிதரின் கேட்கும் வரம்பு : 20 Hz முதல் 20,000 Hz வரை

★ கேட்கப்படும் ஒலியின் நிலைப்புத்தன்மை : 0.1 விநாடி

★ எதிரொலிக்கான குறைந்தபட்சத் தொலைவு 17.2 மீ

★ காற்றில் ஒலியின் வேகம் 340 (அல்லது) 344 மீவி$^{-1}$

★ ஒவ்வொரு 1°C வெப்பநிலை அதிகரிப்பிற்கும் திசைவேகமானது 0.61 மீவி$^{-1}$ அதிகரிக்கிறது.

★ $V_S > V_L > V_G$

★ டாப்ளர் விளைவின் தோற்ற அதிர்வெண், $n' = \left(\frac{V+V_L}{V-V_S}\right) n$